**சுருக்கம்**

வனம்– வன உயிரினம் – விவசாயிகள்–வன உயிரின முரண்களைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் பரிந்துரைகளின் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத் (வ–5)துறை**

அரசாணை (டி) எண்.07

நாள் 09.01.2025
குரோதி வருடம், மார்கழி 25
திருவள்ளுவர் ஆண்டு – 2055
படிக்க:–

1. 2023–2024–ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு,
2. அரசாணை (டி) எண்.185, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத் (வ–5)துறை, நாள் 25.09.2023.
3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரின காப்பாளரின் கடித எண்.வஉ2/10852/2023, நாள். 20.6.2024.

......

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023–2024–ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:–

"'வனவிலங்குகளினால் ஏற்படும் பயிர்சேதம் குறித்து ஆராய்ந்து தீர்வு காண கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலர் (வனவிலங்குகள்) தலைமையில் தனிக்குழு ஒன்று அமைக்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து தமிழ்நாட்டில் வனஉயிரினங்களால் குறிப்பாக யானை மற்றும் காட்டுப்பன்றிகளால் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கும், அதற்கான தீர்வினை கண்டறிந்து அரசுக்கு பரிந்துரை செய்வதற்கும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் தலைமையில் விவசாயப் பிரதிநிதிகள், வனத்துறை, வருவாய்த்துறை, வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, அறிவியல் நிபுணர்கள், தன்னார்வலர்கள் மற்றும் வனஉயிரின ஆர்வலர்கள் என மொத்தம் 19 நபர்கள் அடங்கிய சிறப்பு குழுவை அமைத்து அரசு ஆணை வெளியிட்டது.

3. விவசாய பிரதிநிதிகள் அடங்கிய மேற்படி சிறப்புக்குழு பல நேரடி கலந்தாய்வு கூட்டங்களை நடத்தியது. கேரளா மாநிலத்தில் இதுபோன்று காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை நேரில் அறிந்து கொள்ள

களப்பயணமும் மேற்கொண்டது. மேற்படி கலந்தாய்வு கூட்டங்களில் மேற்கொண்ட விவாதங்கள் மற்றும் பெறப்பட்ட கருத்துக்களின்படியும், கேரளா மாநில களப்பயணத்தில் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலும், விவசாயிகள் – வனஉயிரின முரண்களை தவிர்ப்பதற்கு இக்குழு தனது பரிந்துரைகளை அரசிடம் வழங்கியது.

4. விவசாயிகள் – வன உயிரின முரண்களைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, விவசாயிகள் – வனஉயிரின முரண்களை தவிர்ப்பதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என பரிந்துரைத்தது:–

(1). வனத்தை ஒட்டிய கிராமங்களில் கால்நடை வளர்ப்பைத் தவிர்த்து மாற்றாக கோழி வளர்ப்பை ஊக்குவிக்கவேண்டும்.

- வனப்பகுதிகளில் கால்நடை மேய்ச்சலைத் தவிர்க்க ஆடு, மாடுகளை கட்டிபோட்டு வளர்க்கும் முறையை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை திட்டங்களை கால்நடை பராமரிப்பு துறை மூலம் செயல்படுத்தலாம். இதுதொடர்பாக அப்பகுதியில் வசிப்போரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- கால்நடைத் தீவனங்களை மானிய விலையில் அரசு வழங்குவது குறித்து ஆலோசிக்க வேண்டும்.
- வனம் சார்ந்த கிராமங்களில் வெள்ளாடு வளர்ப்புக்கு பதில் செம்மறி ஆடு வளர்ப்பினை ஊக்கப்படுத்தலாம்.
- கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்,

(2). கால்நடை மேய்ச்சல் நடவடிக்கைகளை குறைத்தல் – கால்நடைகளுக்கு அந்தந்த கிராமப் பகுதியிலேயே தீவனப் பயிர்களை வளர்க்கவும், அந்தந்த கிராமங்களில் மேய்ச்சல் நிலங்கள் இருப்பின் அவற்றை மேம்படுத்தவும், வழங்கவும் நடவடிக்கை எடுத்து வனப் பகுதிகளில் கால்நடை மேய்ச்சலை குறைக்க, நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

(3). திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்துதல் மூலம் வனவிலங்குகள் நெகிழி கழிவுகளை உட்கொள்வதை தடுக்கவும், மக்கும் கழிவுகளால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் காட்டுபன்றியை ஈர்க்கும் சூழலை தடுக்க உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(4). மின்வேலி அமைத்தல், நாட்டு வெடிபொருட்கள் (அவுட்டுக்காய்) பயன்படுத்தி வேட்டையாடுவதை தவிர்க்க / தடுக்க வருவாய், வனம், காவல்துறை மற்றும் கனிமவளம் ஆகிய துறை அலுவலர்கள் மூலம் கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(5). வனப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வனம் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுடன் இணைந்து கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(6). உடனடி நிவாரணம் வழங்குதல்

- நிவாரணம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதங்களை களைய வருவாய்த்துறை மூலம் உரிய சான்றிதழ்களை விரைந்து பெற்று உடனடியாக நிவாரணம் வழங்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- வனவிலங்குகளால் ஏற்படும் பயிர்ச்சேதங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தொகை குறைவாக உள்ளதால் வருவாய்த் துறையில்

வெளியிடப்பட்டுள்ள பேரிடர் நிவாரண நிதி குறித்த அரசாணையினை பரிசீலித்து, நிவாரணத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(7). வனச் சாலைகளில் இரவு நேர போக்குவரத்து கட்டுப்பாடு அறிமுகம் செய்வதன் மூலம் வனவிலங்குகள் விபத்துகளில் சிக்குவதை தடுக்க வேண்டும்.

(8). வன விளைப்பொருட்கள் சேகரம் தவிர்த்தல்

- வனஉரிமைச் சட்டத்தில் அனுமதித்துள்ள வன விளைபொருட்களைத் தவிர மற்றவற்றை சேகரிப்பதை அனுமதிக்கக்கூடாது. எந்தெந்த வன விளைபொருட்கள் சேகரிக்கலாம், எவற்றை சேகரிக்கக்கூடாது என பட்டியல் தயார் செய்ய வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.
- வன உரிமைச் சட்டம் வழங்கும் அனுமதிக்கப்பட்ட உரிமைகளை தடுக்கக்கூடாது.
- உரிய அனுமதி உள்ளவர்களைத் தவிர மற்றவர்களை வனப்பகுதியில் நடமாட அனுமதிக்கக் கூடாது.

(9). மது விற்பனை நிலையங்களை அப்புறப்படுத்துதல்

- வனஎல்லைப் பகுதியில் தற்போது அமைந்துள்ள மது விற்பனை நிலையங்களின் பட்டியல் வனம் மற்றும் உள் (மதுவிலக்கு) துறை மூலம் முதலில் தயார் செய்யப்பட வேண்டும். பின்னர் அவற்றை இடமாற்றம் செய்ய உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கவேண்டும்.

(10). அந்நிய களைச்செடிகள் அகற்றுதல்

- அந்நிய களைச்செடிகளை அகற்றுவதை துரிதப்படுத்த வேண்டும். அந்த இடங்களில் வனவிலங்குகள் விரும்பி உண்ணும் பழ மரங்கள் மற்றும் இதர மர வகைகளை வளர்க்க வேண்டும்.

(11). வன எல்லைப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் கசிவுநீர்க் குட்டைகளை சிறப்பு நிதி பெற்று அமைப்பதன் மூலம் நீர் ஆதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும்.

(12). காப்பீடு (பயிர்/உயிர்) மற்றும் பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா பயிர்க் காப்பீட்டில் வனவிலங்குகளின் மூலம் ஏற்படும் பயிர் சேதாரங்களையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி வகை சேதங்களையும் காப்பீடு பெறுவதற்கான, தகுதி வாய்ந்த பட்டியலில் சேர்க்க மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுடன் ஆலோசிக்க, விவசாயத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(13). மாநில பேரிடர் நிவாரண நிதி

- பிற மாநிலங்களில் வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம் மற்றும் உயிரிழப்புகளுக்கு மாநில பேரிடர் நிதியிலிருந்து நிவாரணம் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டிருந்தால், அதே நடைமுறையை நமது மாநிலத்திலும் பின்பற்ற வருவாய்த் துறை, பரிசீலிக்க வேண்டும்.

(14). பிற துறைத் திட்டங்களை ஒருங்கிணைத்தல்

- விவசாயத் துறையில் வழங்கப்படும் மானியங்கள், பயிர்க் காப்பீடு, கால்நடை பராமரிப்பு துறை மூலம் வழங்கப்பட்டு வரும் கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு திட்டங்கள், போன்ற பிற துறை திட்டங்களை ஒருங்கிணைத்து வன எல்லைப் பகுதியில் வசிப்பவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு அனைத்து திட்டங்களின் கீழும் பயன் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும்.

II. பொதுமக்கள் / விவசாயிகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் பின்வருமாறு:-

(அ) <u>வேலி அமைத்தல்</u>

- யானை புகா அகழிகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும்.
- சூரிய மின்வேலிகள் அமைக்கப்பட்ட இடங்களில் சரியாகப் பராமரித்தல் அவசியம்.
- காட்டுப்பன்றிகள் மற்றும் யானைகள் புகாவண்ணம் குழு பரிந்துரைத்தவாறு இயற்கை வேலிகள் அமைப்பதை ஊக்குவிக்க வேண்டும். இதனை வனத்துறையும் விவசாயத்துறையும் இணைந்து செயல்படுத்த வேண்டும்.

(ஆ) உயிரி மற்றும் வேதியியல் விரட்டிகளை பயன்படுத்தி வனவிலங்குகள் நுழைவதை தவிர்க்கலாம். இது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- ஒவ்வொரு வனவிலங்கு நடமாட்டம் குறித்து, குறிப்பாக காட்டுப் பன்றிகள் அதிகமாக உள்ள வன எல்லைப் பகுதிகளில் அவைகளை விரட்டும் வகையிலான தாவர இனங்களைக் கொண்டு உயிர்-தாவர வேலிகளை அமைக்கலாம். இதை வனத்துறையும் விவசாயத்துறையும் இணைந்து செயல்படுத்தலாம்.

(இ) வன எல்லைப் பகுதியில் வனவிலங்குகளை ஈர்க்காத வகையிலான மாற்றுப் பயிர்களை பயிரிட விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை விவசாயத்துறை வழங்க வேண்டும்.

(ஈ) உயிர்வேலி அமைத்தல், மாற்றுப்பயிர்கள் பயிரிடுவதன் அவசியம், வன விளைபொருட்கள் சேகரித்தல், மேய்ச்சல் நடவடிக்கைகளை குறைக்க ஏதுவாக மாற்று வழிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றில், அப்பகுதி மக்களிடையே விவசாய, கால்நடை பராமரிப்பு மற்றும் வனத்துறை மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.

(உ) உரிமம் பெறாமல் அமைக்கப்பட்டுள்ள சூரியஒளி – மின்வேலி ஆகியவற்றை கண்டறிந்து அவற்றிற்கு உரிய உரிமம் வழங்க வருவாய்த்துறை, மின்சாரத்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் களக்கூட்டுத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ஊ) வனப்பகுதிகளில் சட்டவிரோத ஊடுருவல் மற்றும் வேட்டையாடுதலை தடுக்க வனத்துறையினர் தனது சுற்றுக்காவல் பணியைத் தீவிரப்படுத்த வேண்டும்.

(எ) வனப்பகுதிக்கு அருகில் உள்ள உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மையை கட்டாயப்படுத்த வேண்டும்.

(ஏ) புதர்கள் மற்றும் அந்நிய களைச்செடிகளை அகற்றுவதை விரைவுப்படுத்த வேண்டும்.

(ஐ) பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

5. விவசாய பயிர்களை பாதிக்கும் விலங்கினங்களுள் காட்டுப்பன்றி முக்கிய விலங்கு என்பதால் அதனை கட்டுப்படுத்த சிறப்புக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்து விவசாயிகள் – வனஉயிரின முரண்களை தவிர்ப்பதற்கு, மேற்கூறிய

பரிந்துரைகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானித்து கீழ்க்காணும் வழிமுறைகளை வகுத்து அரசு ஆணையிடுகிறது:–

**காட்டுப்பன்றிகள் நடமாடும் பகுதிகளை மூன்று மண்டலங்களாக பிரிக்கலாம்.**

- **<u>மண்டலம் அ</u>** : காப்புக்காட்டிலிருந்து 1 கி.மீ தொலைவு வரையுள்ள பகுதியில் காட்டுப் பன்றிகளை சுட அனுமதியில்லை.
- **<u>மண்டலம் ஆ</u>** : காப்புக் காட்டிலிருந்து 1 கி.மீ தொலைவு முதல் 3 கி.மீ வரையுள்ள பகுதியில் காட்டுப் பன்றிகளை பிடித்து மீள திரும்பி வனப்பகுதிக்குள் விட்டுவிட வேண்டும்.
- **<u>மண்டலம் இ</u>** : காப்புக்காட்டிலிருந்து 3 கி.மீ தொலைவிற்கு மேல் உள்ள பகுதியில் நடமாடும் காட்டுப் பன்றிகளை வனத்துறை சுட அனுமதிக்கலாம். வனப்பகுதி இல்லாத பகுதிகளை மண்டலம் 'இ' யாகக் கருதி நடவடிக்கை எடுக்கலாம். சுடப்படும் காட்டுப் பன்றிகளை இரசாயனப் பொருள் ஊற்றி புதைக்க வேண்டும் (அல்லது) முழுமையாக எரிக்க வேண்டும். இதற்கான கணக்கினை முறையாக வனத்துறை கட்டாயம் பராமரிக்க வேண்டும்.

- காட்டுப்பன்றியால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்மந்தப்பட்ட வனவர், கிராம நிர்வாக அலுவலர், உள்ளாட்சி அமைப்பின் தலைவர் / பிரதிநிதி அடங்கிய குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

- விவசாய நிலத்தில், காட்டுப்பன்றியினால் பாதிப்பு ஏற்படின், விவசாயிகள் அவ்விவரத்தை மேற்படி குழுவிற்கு தெரிவிக்க வேண்டும். மேற்படி குழு விளைநிலத்தினை தணிக்கை செய்து, அந்நிலத்தில் காட்டுப்பன்றிகள் வழக்கமாக நடமாடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, இழப்பீட்டுத் தொகை வழங்குதல் மற்றும் தேவையான இடங்களில் காட்டுப்பன்றியினை சுடுவதற்கு உரிய பரிந்துரையை சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலருக்கு அளிக்கும். வனச்சரக அலுவலரால் காட்டுப்பன்றியினை சுடுவதற்கு உரிய அனுமதி வழங்கப்பட்டு அப்பகுதியில் காட்டுப்பன்றியின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொள்வார்.

<u>பயிற்சி</u>

- காட்டுப் பன்றிகளை சுடுவதற்கான நடவடிக்கைகள், மேற்படி குழுவின் பரிந்துரையின் படியே வனத்துறையின் மூலம் மேற்கொள்ள வேண்டும்.
- அத்துடன் அதற்கு தேவையான துப்பாக்கி உபகரணங்களை வாங்கவும், பயிற்சி அளிக்கவும் வனத்துறை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவையான நிதி மாநில அரசால் வழங்கப்படும். அதற்கென காட்டுப்பன்றிகளின் நடமாட்டம் உள்ள வனப் பகுதியைக் கொண்ட எல்லா வனச்சரகங்களிலிருந்தும் இரண்டு களப்பணியாளர்கள் (வனவர்/வனக்காப்பாளர்) தேர்ந்தெடுக்கப்பட்டு, துப்பாக்கி கையாளுதல் மற்றும் நேர்த்தியாக சுடுவதற்கான பயிற்சிகள் வழங்கிட வனத்துறை நடவடிக்கை எடுக்கும்.
- Modernization of Forest Force திட்ட நிதியின்கீழ் நவீன துப்பாக்கிகள் வாங்கப்பட்டு, துறை களப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென பயிற்சிகள் வனத்துறை மூலம் வழங்கப்படும்.

- காட்டுப்பன்றி வேட்டைக்கான உபகரணங்கள், துப்பாக்கி சுடும் பயிற்சி, விழிப்புணர்வு நடவடிக்கைகள், வேட்டைக்கான ஏற்பாடுகள், வாகனங்கள், இறந்த பன்றிகளை அழித்தல் / எரித்தல் போன்றவற்றிற்குத் தேவையான செலவினம் வனத்துறை மூலம் அரசால் வழங்கப்படும்.

6. மேலே பத்தி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளை மாவட்ட அளவில் குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணித்து, ஆய்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில், வன அலுவலர்கள், வேளாண் அலுவலர்கள், உள்ளாட்சிதுறை அலுவலர்கள் மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினை அமைத்து செயல்பட அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத் துறை தலைவர்), சென்னை - 32.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை
வனஉயிரினக் காப்பாளர், சென்னை - 32.
சிறப்புக் குழுவின் உறுப்பினர்கள் (முதன்மை தலைமை
வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரினக் காப்பாளர் வழியாக)
வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வேளாண்மை- உழவர் நலத்துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட வன அலுவலர்கள்.

**நகல்:-**
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு வனத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், , சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
அரசு முதன்மை செயலாளரின் தனிச்செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை, சென்னை-9.
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத் (வ-7) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9.1.25
பிரிவு அலுவலர்
9.1.25